**O .S. 163/2004 16.12.2020, 11.25 am - 12.10 pm**

**வா.சா.3, வஜ்ஜிரம், த/பெ.பூங்காவன கவுண்டர்**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான்தான் இந்த வழக்கில் இரண்டாம் வாதி என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது, சர்வே எண்.477 மற்றும் 478 எண்கள் ஆகும். வழக்கு சொத்தின் செக்குபந்தி விவரங்களை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய விவரங்களை யார் கூறியது என்றால் நான்தான் கூறினேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எங்களுக்கு வரவேண்டிய பங்கு கிடைக்காததால் பங்கு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எந்த ஆவணத்தை அடிப்படையாக கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பட்டா, சிட்டா அடிப்படையில் தாக்கல் செய்துள்ளோம். பட்டா, சிட்டா யாருடைய பெயரில் உள்ள ஆவணத்தை வைத்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் பூங்கவான கவுண்டர். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு வனத்துறையில் எத்தனை வருட காலமாக பணியில் இருந்தேன் என்று சொன்னால் 32 வருடகாலமாக இருந்தேன். 1ம் வாதி அப்பாவு தமிழ்நாடு வனத்துறையில்தான் பணியில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். பணிநிமித்தமாக நீங்கள் திருவண்ணாமலையில் குடியிருந்தீர்கள் என்று சொன்னால் எந்தெந்த பகுதியில் பணியில் இருக்கிறோமா அந்த பகுதியில் தங்கியிருப்போம், அடிக்கடி வந்து செல்வோம். பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆனது பூங்காவனம் என்பவர் முனிசாமி கவுண்டரிமிருந்து கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணத்தின்படி பூங்காவனத்திற்கு தனிப்பட்ட சுயராஜ்ஜியமாக பெறப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 பட்டா புத்தகத்தை வருவாய்துறையினர் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் பூங்காவனத்திற்கு கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் பூங்காவன கவுண்டர் பட்டா மற்றும் கிரையம், அடிப்படையில் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளான ஆண் வாரிசுகள் பூங்காவனத்தை பராமரித்து கொள்ளாமல் தனிப்பட்ட முறையில் விட்டுவிட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என்ன உறவுமுறை என்றால் சகோதரிகள். பிவா.சா.ஆ.9, 24.09.2001-ல் வழக்கு சொத்து குறித்து 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி பதிவு செய்துகொடுத்த விவரம் எப்பொழுது தெரியும் என்றால் என் தகப்பனார் இறந்தபிறகு தெரியும். என்னுடைய தகப்பனார் இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து தெரியும் என்றால் ஒரு மாதம் கழித்து தெரியும். பெரியசாமி என்பவர் யார் என்றால் என்னுடைய அண்ணன் ஆவார். பெரியசாமி அவருடைய வாரிசுதாரர்கள் யார் யார் என்று காண்பிக்க வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ2.-ல் மேல்பகுதியில் எனது தகப்பனார் பூங்காவனததின் இறப்பு சான்றிதழ் குறிப்பிட்டுவிட்டு ஆனால் பெரியசாமியின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய தகப்பனார் இறந்த தேதி 10.10.2001ஆகும். என்னுடைய தகப்பனார் இறப்பதற்கு எத்தனை ஆண்டுகளாக மருத்துவமனையில் தங்கி இருந்து பரிசோதனை கொண்டார் என்று சொன்னால் மருத்துவமனைக்கு சென்று வந்துகொண்டிருப்பார், தங்கி சிகிச்சை எடுக்கவில்லை. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தான் பூங்கவானத்தின் மருத்துவ செலவீடுகளை பார்த்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 முதல் 8 வரையுள்ள ஆவணங்களான மருத்துவ சீட்டு ஆவணங்கள் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலின் அடிப்படையில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் மாற்றப்பட்டு அந்த ஆவணங்களை பி.வா.சா.ஆ.10, 11 தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குரிசிலாப்பட்டு பகுதியில் உங்களுடைய தகப்பனார் உங்கள் பெயருக்கு இடம் வாங்கி பதிவு செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, அந்த இடத்தை நானே வாங்கினேன். அந்த இடத்தில் வீடு கட்டி யார் வசித்து வருகிறார்கள் என்றால் நான்தான். சுமார் எத்தனை வருடகாலமாக வசித்து வருகிறேன் என்றால் சுமார் 30 வருடகாலமாக வசித்து வருகிறேன். அதாவது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் 10.10.2001 இறந்த வருடத்தில் நானும், 1ம் வாதியும் பணியில் இருந்தோமா என்றால் பணியில் இருந்தோம். அன்றைய தேதியில் 1ம் வாதி மற்றும் நீங்களும் பணியில் இருந்தீர்களா அல்லது விடுப்பில் இருந்தீர்களா என்றால் பணியில் இருந்தோம். 10.10.2001-ல் இறந்த விவரம் எங்களுக்கு தகவல் தெரிந்து மறுநாள் நாங்கள் வந்தோம். 11.10.2001-ல்தான் சடலம் அடக்கம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பாகவே 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள்தான் இறப்பிற்கான சாஸ்திர சம்பரதாயங்களுக்கான செலவினங்களை செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ன் பத்திர பேப்பர்களை யார் வாங்கி வைத்தார்கள் என்றால் என்னுடைய தகப்பனார் பூங்காவன கவுண்டரே வாங்கி வைத்திருந்தார் நான் எதுவும் பத்திரம் வாங்கவில்லை. வா.சா.ஆ.1 பத்திரத்தை எந்த தேதியில் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதி அப்பாவு பத்திரத்தை வாங்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார்தான் பத்திரத்தை வாங்கி எழுதினாரா என்றால் ஆமாம். 08.10.2001-ல் பணியில் இருந்தேனா என்றால் பணியில் இல்லை, விடுமுறை எடுத்து எனது தகப்பனார் அழைத்ததன்பேரில் வந்தேன். அந்த ஆவணத்தை எழுதும்பொழுது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி, 1ம் வாதி, பெண் பிள்ளைகள் அனைவரும் இருந்தார்கள். மேற்படி ஆவணத்தில் பெண் பிள்ளைகள் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் இறப்பதற்கு முன்பு எத்தனை வருடங்களாக கோமாவில் இருந்தார் என்றால் கோமாவில் இல்லை. மேற்படி ஆவணம் எழுதும்பொழுது என்னென்ன மூல ஆவணங்கள் ஒப்படைத்தார் என்றால் எதுவும் ஒப்படைக்கவில்லை. ஆவணம் ஒன்றை எழுதும்பொழுது அதனுடைய மூல ஆவணங்கள் அனைத்தையும் ஒப்படைப்பது பொதுவான விவரம் அதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1-ல் 3வது சாட்சியாக உள்ள நபர் 1ம் வாதியின் மாமனார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 1வது சாட்சியாக உள்ள நபர் 3ம் வாதீயின் மாமனார் என்றால் சரிதான். 24.09.2001-ல் எழுதப்பட்ட உயில் ஆவணத்தை ரத்துசெய்யப்பட்டு 08.10.2001-ல் இந்த உயில் ஆவணத்தை

எழுதியதாக எதுவும் அந்த சமயம் பேசப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் ஆவணம் எழுதும்பொழுது இருந்த சமயத்தில் அவர்களிடம் சாட்சி கையொப்பம் ஏன் பெறவில்லை என்றால் ஊர் பெரியோர்கள் செய்ததால் அவரக்ளிடம் பெறவில்லை. வா.சா.ஆ.1 பத்திரம் என்னுடைய தகப்பனார் எழுதிகொடுக்கவில்லை அந்த ஆவணத்தை என்னுடைய தகப்பனார் எழுதி கொடுத்ததாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள நபர்கள் வாதிகளின் உறவினர்கள் என்பதால் அவர்களை வைத்து வா.சா.ஆ.1-ஐ போலியாக தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ஐ எத்தனை தாளில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஒரு 20ரூபாய் தாளிலும் 3 வெள்ளை பேப்பர்களிலும் எழுதப்பட்டுள்ளது. அந்த உயிலை நடைமுறையாக்குவதற்கு சட்டப்படியான நடவடிக்கை ஏதேனும் எடுத்தீர்களா என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வழக்கை தவிர வேறு எந்த வகையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் இறந்தபிறகு 24.09.2001 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் மற்றும் 4 பிரதிவாதிகள் சட்டபடி நடவடிக்கைகள் எடுத்து வருவாய் ஆவணங்களை அவர்கள் பெயருக்கு மாற்றிகொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பூங்காவனம் எழுதிகொடுத்த உயில் ஆவணமான 24.09.2001 சட்டப்படியானது என்பதால்தான் வருவாய்துறை ஆவணங்கள் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயருக்கு மாற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 தான் உண்மையானது என்றும், வா.சா.ஆ.1 உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதால் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பதிலுரையில் எனக்கு எழுதிகொடுக்கப்படட ஆவணம் போலியானது என்றும், அவர்களுக்கு எழுதிகொடுத்த ஆவணம்தான் உண்மை என்றும் கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.மேற்படி விவரத்தை தெரிந்துகொண்டு மேற்கொண்டு சட்டநடவடிக்கைகள் ஏதேனும் எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை. நான் அரசு ஊழியராக இருந்தும் எனது தாய், தந்தையரை பராமரிக்காததால், 3 4 பிரதிவாதிகள் பார்த்து கொண்டதால் அவர்களுக்கு சட்டப்படியான உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய தகப்பனாருக்கு மகன் என்ற முறையில் எந்தவித பராமரிப்பும் செய்யாததால் 3, 4 பிரதிவாதிகளுக்கு அவர் சுயமாக சம்பாதித்த சொத்தை உயில் மூலமாக எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அவர் சுயமாக சம்பாதித்த சொத்தை 3, 4 பிரதிவாதிகளுக்கு கொடுத்தார் என்றும், மூதாதையர் சொத்துக்களை 1, 2 வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட எந்த மூல ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், நீங்கள் தாக்கல் செய்துள்ள முதலாவது ஆவணம் வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வா.சா.1, 2-ற்கான சாட்சியம் தங்களுடைய சாட்சியத்திற்கு முரண்பட்டதால் உயிலானது பொய்யாக உருவாக்கப்பட்டது என்று தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை உயில்படி 3, 4 பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருவதால் அவர்களுக்குதான் உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது வழக்கில் தாக்கல் செய்துள்ள வாக்குமூல விவரம் எனக்கு தெரியும். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்குமூலங்களும் தவறானது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் இறப்பதற்கு முன்பு 4, 5

நாட்களாக சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்பது எங்கள் தரப்பு சாட்சியங்கள் அடிப்படையில் தெரியவருவதால் அந்த ஆவணம் போர்ஜரியாக உருவாக்கப்பட்டது என்று தெரியவருகிறது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் நீங்கள் கோரும் எந்த பரிகாரமும் கடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே, வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டியது என்றுசொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.